முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிரம்மமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.10.2018, திங்கட்கிழமை

1. **அருட்குருவே அரங்கா போற்றி**
**அண்ணலே தேசிகா போற்றி**
**அருட்சுடராம் சரவணஜோதி ஏற்றி**
**அகிலம் காக்கும் ஞானம் வகுத்த**

2. வகுத்தநல் ஆறுமுக அரங்கா
வள்ளலே உன் பெருமை கூறி
மிகைபட ஒளி சூட்சும நூலை
மண்ணுலகில் **விளம்பி தரிவை திங்கள்**

3. **திங்களிலே இருபானீர் திகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 22ம் நாள் 08.10.2018, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு பிரும்மமுனிவரும்**
இங்ஙனமே உலக நலமுற உரைப்பேன்
இனிதே அரங்கன் கொள்கை

4. கொள்கை ஏற்று வரும் மக்கள்
குவலயத்தில் தனித்துவம் பட
ஆள்பவர்களாக சிறந்தும்
ஆறுமுகன் தயவும் பெற்று உயர்வர்

5. உயர்வு தரும் தருமம் செய்யும்
உயராசான் அரங்கன் வழி
தயவுமிக்க ஞானவழி என்பதும்
தரணியோர் ஏற்று வருக

6. வருகவே எல்லா வகையும்
வரம் கிட்டி வல்லமை கூடி
முருகனருள் சீடர்களாக
முழுமை ஞானம்தனை அடைவர்

7. அடையவே ஞான குருவாக
அரங்கன் வீற்றுள்ள குடிலை
தடையற மக்கள் அணுகி
தரிசித்து அருளமுது உண்ண

8. உண்ணவே மக்களுக்கு திடம்
உண்மைபட ஞான பலமும்
எண்ணம் வழி சக்தி கூடி
எல்லா செயல்களிலும் வெற்றியும்

9. வெற்றிபட அரங்கன் காட்டும்
வேலவன் வழிபாடு பெருக
ஆற்றல்பட எல்லா தேசமும்
அழிவென்பது இல்லா நிலை கண்டு

10. கண்டுமே கலியுக மாற்றம்
கட்டாயம் அரங்கன் சீடர்கள்
தொண்டு வழியில் நடக்கும்
தெய்வீக நிலை பரவும்

11. பரவிட ஞான யுகவாழ்வு
பாமரர்க்கும் எளிதில் கிட்டி
துறவிகள் வழி உலகமே
தூய்மை காணும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பிரும்மமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அருளாற்றல் நிறைந்திட்ட அருளே வடிவான அருட்குருவே அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி, அண்ணலே ஞானதேசிகனே போற்றி போற்றி, சர்வ வல்லமைமிக்க அருட்ஜோதி சுடராம் சரவணஜோதிதனை ஏற்றி இவ்வுலகைக் காக்கின்ற, ஞானம்தனை வகுத்து மக்கள் கடைப்பிடித்திட ஞானம்தனை எளிமைப்படுத்தி மக்கள் கடைப்பிடித்திட வகை செய்து அருளுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 22ம் நாள் 08.10.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பிரும்மமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிரும்மமுனிவர்.

நன்மை அளிக்கக் கூடியதும், கடைப்பிடிப்பதற்கு எளிதானதும் அதேசமயம் சர்வவல்லமை பெற்று ஞானத்தை தரவல்லதுமாகிய ஞானக்கொள்கையாம் ஆறுமுக அரங்கன் வகுத்திட்ட தூயநெறிக் கொள்கைகளை மனமார விரும்பி ஏற்று கடைப்பிடித்து வருகின்ற மக்களெல்லாம் இந்த கலியுகத்திலும் தனித்துவம்பட நாட்டை ஆள்பவர்களாகவும் தகுதி பெற்று சிறந்து விளங்கி முருகப்பெருமானின் தயவினையும் பெற்று உயர்வடைவார்கள்.

எல்லாவிதமான முன்னேற்றங்களையும் மக்களுக்கு அருள் செய்வதோடு உலகம் நலம் பெறவே அளவிலாது தர்மங்கள் செய்கின்ற உயர்ஞான குருநாதர் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் ஞானவழியானது தயவுமிக்க ஞானவழி என்பதினால் உலக மக்களெல்லாம் தருமவழியிலான தயவுமிக்க அரங்கனின் ஞானவழிகளை ஏற்று அரங்கனை பின்தொடர்ந்து தானதருமங்களை செய்து வரவர, அவர்களுக்கு சகலவிதங்களிலும் அரங்கன் அருள் பெருகி சகல வரங்களும் கிடைத்து வல்லமைகளும் பெருகி முருகப்பெருமானின் அன்பிற்கு பாத்திரமாகி முருகப்பெருமானின் அருள் சீடர்களாக ஆகி சிறப்பான ஞானவாழ்வினை வாழ்ந்து முழுமை ஞானம்தனை அடைந்து சிறப்படைவார்கள்.

உலக மக்கள் அற்புதம்மிக்க ஞானம்தனை அடைய வேண்டுமாயின் அவரெல்லாம் உலக மாற்றம் செய்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்து ஞானகுருவாக அரங்கன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகி ஆங்கே அரங்கனை தரிசனம் செய்து குடிலில் ஞானிகளை வணங்கி மக்களுக்கு அளிக்கப்படுகின்ற

அருளமுதாம் உணவினை உண்டு வர, உணவு உண்ணும் மக்களுக்கு மனோதிடம், உடல்திடம் கூடுவதுடன் உண்மையாகவே ஞானபலமும் பெருகி அவரவரின் எண்ணங்களைப் பொறுத்து சக்தி கூடி அவர்கள் மேற்கொள்ளும் எல்லா செயல்களிலும் வெற்றியடைந்து சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் எளிமையும் வல்லமையும்மிக்க முருகப்பெருமானின் வழிபாடு உலகினில் பெருக பெருக, எல்லா தேசங்களிலும் வழிபாடு செய்திட, வழிபாடு செய்திட்ட அனைத்து தேசங்களும் அழிவு என்பது இல்லாத நிலையை அடைந்து உத்தம தொண்டர்களான ஆறுமுக அரங்கனின் அருட்சீடர்கள் மூலமாக கட்டாயம் உலகினில் அரங்கனின் சீடர்கள் ஆற்றும் தொண்டுகளால் உலக மாற்றம் நடந்தே தீரும். உலகமெலாம் முருகன் அருள் கூடி தெய்வீக நிலை உறுதியாக பரவிடும்.

உலகினில் முருகப்பெருமானின் தெய்வீக நிலை பரவ பரவ, உலகமெலாம் உள்ள கல்வி அறிவு இல்லாத பாமர மக்கள் கூட, முருகப்பெருமானின் அன்பிற்கும் அருளிற்கும் ஆளாகி ஞானயுக வாழ்வு அவர்களுக்கும் கிடைத்து மேன்மை அடைவர். பற்றுகளைத் துறந்த துறவிகளின் மூலமாக இவ்வுலகம் தூய்மைப்படுத்தப்பட்டு மக்களின் மாயையும் குணக்கேடுகளும், அநீதிகளும் மாற்றப்பட்டு இவ்வுலகமே தூய்மையான ஞானஉலகமாக ஆறுமுக அரங்கன் தலைமையில் முருகப்பெருமானின் அருள் ஆற்றலால் ஞானிகள் துணையுடன் தூய்மைப்படுத்தப்பட்டு தூயஉலகாக ஞானஉலகமாக ஆக்கப்பட்டு ஆங்கே முருகப்பெருமானின் ஞானஆட்சி உருவாக்கப்படும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பிரும்மமுனிவர்.

–சுபம்–